www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

**அற்புதன் எழுதுவது**



வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் அவசரகால நிதியுதவி கோரி 1991 இல் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளில் அப்போதிருந்த புலிகள் இயக்க பலம், பலவீனம் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த வேண்டுகோளின் ஒரு பகுதி இது:

"தமிழீழ விடுதலைப் போராட்டம் தலைவர் பிரபாகரன் அவர்களால் தலைமை தாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

போராட்டத்தை வழிநடத்தும் தலைமையின் அரசியல், இராணுவக் கொள்கைகள், தீர்க்கதரிசனமான முடிவுகள் என்பவை காரணமாகவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை யாரும் நசுக்க முடியவில்லை.

பூரண பங்களிப்பு எமது போராட்டத்திற்கு இன்றுவரை பூரணமாக கிட்டவில்லை. ஆயினும் கணிசமானளவு மக்களது ஆதரவு கிடைத்துள்ளது.

ஐந்து இலட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்வதாக கூறப்படுகிறது. இவர்கள் மாதம் ஒருமுறை ஐந்து டொலரோ, அல்லது ஐந்து பவுணோ போர் நிதியாக வழங்கியிருந்தால்

புலிகளுக்கும் இடையே நட்பை உருவாக்க நினைத்தார் மாலினி.

காசி ஆனந்தனிடம் "ராஜீவை சந்திக்க விரும்புகிறீர்களா?" என்று மாலினி கேட்டிருக்கிறார்.

காசி ஆனந்தனும் சம்மதித்திருக்கிறார். இச் சந்திப்பு தொடர்பாக லண்டனில் இருந்த கிட்டுவுக்கும் காசி அனந்தன் தகவல் கொடுத்திருக்கிறார்.

இந்திய அரசுடன் மீண்டும் நட்பை உருவாக்க வேண்டும் என்பது கிட்டுவின் விருப்பம்.

இந்தியா எந்தெந்த வகையில் ஈழப் போராட்டத்திற்கு உதவமுடியும் என்பதை விளக்கி கனடா உலகத் தமிழர் பத்திரிகையில் நீண்ட கட்டுரை ஒன்றை 1991இன் ஆரம்பத்தில் கிட்டு எழுதி இருந்தார்.

இந்தியாவை பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதே கிட்டுவின் எண்ணமாக இருந்தது.

ராஜீவ் காந்தியுடன் காசி ஆனந்தன் சந்திப்பதற்கு கிட்டுவும் பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

ராஜீவ்காந்தியும் காசி ஆனந்தனை சந்திப்பதற்கு மறுப்புக் கூறவில்லை.

1991 மார்ச் மாதம் ஐந்தாம் திகதி புதுடில்லியில் உள்ள ராஜீவ் காந்தி இல்லத்தில் காசி ஆனந்தன் ராஜீவ் காந்தியை சந்தித்தார்.

ராஜீவ் காந்தி மிக




செய்ததையும், பணயக் கைதிபோன்று கறுப்பு பூனைகளின் பாதுகாப்பில் தன்னை வைத்திருந்ததையும் பிரபா மறக்கவில்லை.

'இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி என் முதுகில் குத்திவிட்டார்.' என்று வை.கோவிடம் அப்போதே கூறியிருந்தார் பிரபா.

ஹெலிகொப்டர் அனுப்பி தன்னை யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துவிட்டு, பின்னர் ஒப்பந்தத்தில் கையொப்பம் போடுமாறு எஜமான மனப்பாங்குடன் ராஜீவ் பேசிய பேச்சுக்கள் பிரபாகரனுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

ராஜீவ்காந்தி மறுபடி பிரதமராக வந்தால், பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்து உயிர் கொடுக்க முற்படுவார். வடக்கு-கிழக்கில் செத்துப்போன மாகாணசபைக்கு உயிர் கொடுக்க நினைப்பார்.

இலங்கை அரசுக்கும் புலிகளை ஒடுக்க ராஜீவ் உதவக்கூடும். எனவே ராஜீவ் மறுபடி பிரதமராகக் கூடாது என்று தீர்மானித்தார் பிரபாகரன்.

வேறு யாருக்கும் விபரம் தெரியவில்லை.

புலிகளின் உளவுப் பிரிவுக்கு அப்போது பொறுப்பாக இருந்தவர் பொட்டம்மான்.

ராஜீவ் கொலைத் திட்டத்துக்கான தகவல்களை திரட்டுவது உட்பட பல பொறுப்புக்கள் உளவுப்பிரிவிடமே கையளிக்கப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் க.பத்மநாபா கொலைக்கு பொறுப்பாக இருந்த சிவராசனையே, ராஜீவ் கொலை நடவடிக்கைக்கும் பொறுப்பாக நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

'ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நாம் தரும் தண்டனை இதுதான்' என்பதை உணர்த்துவதும், இந்தியப் படை காலத்தில் பலியான மக்களதும், தமது உறுப்பினர்களதும் இழப்புக்களுக்கான தீர்ப்பாகவும் ராஜீவ் மீதான தாக்குதல் நடத்தப்படவேண்டும் என்ற முடிவை பொட்டம்மான் சிவராசனிடம் கூறினார்.

முதலில் சிவராசன் சென்று தாக்குதலுக்கான ஆயத்தங்களை செய்வது. தாக்குதலுக்கு செல்வோர் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது என்று முடிவானது.

முதல் கட்ட ஏற்பாடுகளை செய்வதற்கு சிவராசன் படகு மூலம் தமிழ்நாட்டுக்கு சென்றார்.

ராஜீவ்காந்தியை புதுடில்லியில் வைத்து தீர்த்துக்கட்டவே திட்டமிடப்பட்டது.

புதுடில்லியில் அதற்கான ஏற்பாடுகள், ஒழுங்குகளை கவனிக்க இந்தியன் எயார் லைன் விமானம் மூலம் சென்னையில் இருந்து புதுடில்லிக்கு சென்றார் சிவராசன்.

# ராஜீவ்-காசி ஆனந்தன் சந்திப்பு!

இன்று தமிழர்களது பிரதிநிதிகளாக அவர்களது பிரச்சனைகளை தீர்க்கக்கூடியவர்களாக இருப்பவர்கள் புலிகளே.

இதனை தமிழ் மக்களும், சர்வதேச நாடுகளும், சர்வதேச ஸ்தாபனங்களும் அங்கீகரித்துள்ளன.

தற்போதைய நிலையை நாம் போராட்டத்தின் ஆரம்ப நிலை என்றோ அல்லது இறுதி நிலை என்றோ கூற முடியாது.

வடக்கு-கிழக்கின் பலபகுதிகளை புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், வானத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை.

வானத்தையும் பூரணமாக கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வானத்தை கட்டுப்படுத்துவதற்கான தளபாட வசதிகள் மேலும் தேவையாக உள்ளன.

50 கலிபர் துப்பாக்கிகளால் வானத்தை கட்டுப்படுத்தும் நிலை மாறி, தற்போது அதைவிட நவீன விமான எதிர்ப்பு துப்பாக்கிகளால் கட்டுப்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய கட்டம் வந்துள்ளது.

பொருத்தமான ஆயுத தளபாடங்களை பயன்படுத்துவதன்மூலமே ஆகாயத்தை கட்டுப்படுத்த முடியும்.

இன்று விடுதலைப் புலிகள் பூரணமாக ஆயுத பாணிகளாக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறமுடியாது.

இன்று புலிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை எதுவெனில், கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை காப்பாற்றும் அதே வேளை, நிலப்பரப்புகளை மீட்க வேண்டியும் உள்ளது.

### மரபுப்படை

கெரில்லா அமைப்பாக இருந்த விடுதலைப் புலிகள் இன்று மரபு இராணுவ அமைப்பாக படிப்படியாக மாறிவருகின்றனர்.

விடுதலைப் புலிகளை அழிக்க முற்படும் அரசு, தனது இராணுவத்தை பலப்படுத்த பெருமளவான ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து வருகிறது.

இன்று அரசு வேண்டி நிற்கும் பாதுகாப்பு நிதிக்கு சகல சிங்கள மக்களும் உதவி வருகின்றனர். இதன் மூலம் பல கோடிகள் நிதியாக திரள்கிறது.

எதிர்காலத்தில் இதன் மூலம் பாரிய இராணுவ படையெடுப்புக்களை அரசு மேற்கொள்ளும். இந் நிலையில் தமிழ் மக்களும் தம்மைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று நினைப்பது தவறு.

அரசு ஒருபோதுமே பேச்சுவார்த்தை மூலம் தமிழர்களுக்கான உரிமைகளை கொடுக்க விரும்பாது.

சுயநிர்ணய உரிமையும், ஆயுதங்களும் முக்கியமானவை. புலிகள் ஒருபோதும் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை. அரசும் சுயநிர்ணய உரிமையை ஏற்று இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதில்லை.

சர்வதேச சமூகத்தை ஏமாற்ற காலத்திற்கு காலம் பேச்சுவார்த்தை என்ற மாயையை அரசு உருவாக்கும். இதனால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை.

இந்நிலையில் ஆயுதப் போராட்டத்தை வலுப்படுத்தி விடுதலையை வென்றெடுப்பதே ஒரே வழி.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களது

மிகுந்த பயன் கிட்டி இருக்கும்.

இதுவரை காலமும் குறிப்பிட்ட விகிதத்தினரே பங்களித்தனர். இப்போது புலிகள் மீண்டும் அவசரகால உதவி கோரி நிற்கின்றனர். அனைவரும் உதவ வேண்டும்." மேற்கண்டவாறு புலிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

### சோதிடர் கணிப்பு

கொழும்பில் பிரபலமான சோதிடர் ஒருவர் கூறியதாக ஒரு செய்தி பரவியிருந்தது.

1991 ஜூலை மாதம் பிரபாகரன் இலங்கை அரச படைகளால் கைது செய்யப்படுவார் என்பதே அச் செய்தி.

இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து பண்டிதர் கணபதிப்பிள்ளை என்னும் சோதிடர் திடுக்கிடும் ஆருடம் ஒன்றைக் கூறினார்.

'இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா விரைவில் கொல்லப்படுவார். அதைத் தொடர்ந்து நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும்.

இயல்பாக உரையாடினார். நடந்ததை எல்லாம் மறந்து விடுமாறு காசி ஆனந்தனிடம் கூறினார்.


"பிரபாகரன் எப்படியிருக்கிறார்? எனது வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவியுங்கள்!" என்று காசி ஆனந்தனிடம் கூறினார் ராஜீவ்.

அந்தச் சந்திப்பை இரகசியமாக வைத்திருக்க இருதரப்பும் விரும்பியதால் 'இந்து' பத்திரிகையும் அத் தகவலை வெளியிடவில்லை.

சந்திப்பு முடிந்த பின்னர் அதுபற்றி கிட்டுவுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார் காசி ஆனந்தன்.

### கோபம் தீரவில்லை

இச்சந்திப்பு குறித்து பிரபா




# தண்டனை வழங்க பிரபா முடிவு

அந்தக் குழப்பத்தில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றும் என்று அவர் கூறியிருந்தார்.

ரஞ்சன் விஜயரத்ன கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் இதே சோதிடர், 'விரைவில் கொழும்பில் பிரபலமான அரசியல்வாதி ஒருவர், கொல்லப்படுவார்' என்று கூறியிருந்தார்.

அதனால் அச் சோதிடர் பிரேமதாசா பற்றிக் கூறியதும் பலரது கவனத்தை ஈர்த்தது.

கொழும்புச் சோதிடர் கூறியது பலிக்காது விட்டாலும், யாழ்ப்பாணத்து சோதிடர் கூறியதில் பாதி பலித்தது.

இதே சோதிடர் இந்தியாவில் பிரபலமான அரசியல் தலைவர் ஒருவர் கொல்லப்படுவார் என்றும் கூறியிருந்ததுதான் அடுத்த ஆச்சரியம்.

இந்தியாவில் கொல்லப்படப்போகும் அந்த அரசியல்வாதி யார்? என்று அவர் கூறவில்லை.

### காசி ஆனந்தன் சந்திப்பு

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை விடுதலைப் புலிகளை ஆதரித்ததோடு, இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியதற்கு எதிரான நிலைப்பாடும் எடுத்திருந்தது.

ராஜீவ் காந்தியுடன் 'இந்து' பத்திரிகை குடும்பத்தைச் சேர்ந்த மாலினி பார்த்தசாரதிக்கு நட்பு இருந்தது.

இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நடைபெற ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

காங்கிரஸ் கட்சி மறுபடி ஆட்சியைப் பிடிக்கும் என்று கணிப்புக்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

'இந்து' பத்திரிகையின் டில்லி பதிப்பின் துணையாசிரியராகவும் இருந்தவர் மாலினி பார்த்தசாரதி.

மாலினி பார்த்தசாரதிக்கு கவிஞர் காசி ஆனந்தனுடனும் நட்பு இருந்தது.

இந்திய, இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதிப்படை நடவடிக்கைகள் போன்றவற்றால் ராஜீவ்மீது புலிகள் கடும் கோபம் கொண்டிருந்தனர்.

அந்தக் கோபத்தை தணித்து ராஜீவுக்கும்,

கரனுக்கு தகவல் தரப்பட்டது. ஆனால் பிரபா ராஜீவ் கூறியதுபோல நடந்ததை எல்லாம் கனவாக மறந்துவிட தயாரில்லை.

ராஜீவ் காந்தியின் உத்தரவுகளால் ஏற்பட்ட அழிவுகளையும், படுகொலைகளையும், பாலியல் வல்லுறவுகளையும், தமது உறுப்பினர்கள் பல நூறுபேர் பலியானதையும் மறந்துவிட பிரபாகரன் தயாரில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பம் போடுமாறு தன்னை நிர்ப்பந்தம்

இந்தியப் படை வடக்கு-கிழக்கில் நிலை கொண்டு அத்துமீறல்களில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே புலிகளால் குறிக்கப்பட்டு விட்டது இதுதான்:

"ராஜீவ் காந்திக்கு தண்டனை கொடுத்தாக வேண்டும்!"

### தீர்மானம்

மிக இரகசியமான திட்டம் என்பதால் திட்டத்தோடு தொடர்புடையவர்கள் தவிர

ராஜீவ் காந்திக்கு குறி வைத்து அதற்கான திட்டங்களும் தயாராகிக் கொண்டிருந்ததை காசி ஆனந்தனோ, இலண்டனில் இருந்த கிட்டுவோ அறியவில்லை.

ராஜீவை காசி ஆனந்தன் சந்திக்கும் போது, அவரை தீர்த்துக்கட்டும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

புதுடில்லி சென்ற சிவராசன் ராஜீவ் காந்தியின் நடமாட்டங்களை கண்காணிக்க ஆரம்பித்தார்.

(தொடர்ந்து வரும்)

## "மாகாணசபை அரைகுறைத் தீர்வு"

**உலகத் தமிழர் பத்திரிகையில் 1991 ஏப்ரலில் கிட்டு எழுதியதில் இருந்து ஒரு பகுதி:**

### சமாதான முகமூடிக்குள் பிரேமதாசா

அண்மையில் கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா புலிகளை மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இன்றும் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்து இருப்பதாகவும் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.

இவ்வழைப்புக்கள் கேட்பதற்கு மிக அழகாகத்தான் இருக்கிறது. இதன் உள் அர்த்தமோ புலிகளை சரணடையுமாறு அழைப்பு விடுப்பதாகவே காணப்படுகிறது.

மாகாணசபை எந்தவிதத்திலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதையும், இதே மாகாணசபைத் தீர்வை இந்தியா திணிக்க முற்பட்டபோது இந்திய படைகளுக்கும் தமிழ மக்களுக்கும் இடையில் பெரிய மோதல் ஏற்பட்டதும் எமது வரலாற்றின் கசப்பான சம்பவங்கள்.

இந்த கசப்பான சம்பவத்தையும் அதனுடைய தாக்கத்தினால் எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்வுகளையும், எமது மக்கள் இலகுவில் மறந்து விடமாட்டார்கள்.

### சமாதான அழைப்பும் இராணுவ அர்த்தமும்

மீண்டும் பிரேமதாசா மாகாணசபைத் தீர்வைப்பற்றியே பேசுகிறார். இவர் வேண்டும் என்ற ஒரு சமூக நிலை உருவாகுவதை தவிர்க்க விரும்புகின்றார்.

சமாதானத்தைப் பற்றியும் பேச்சுவார்த்தை பற்றியும் பேசிக்கொண்டு இருக்கையிலே, தமிழீழப் பகுதியில் பாரிய இராணுவத் தாக்குதலும், பொருளாதாரத் தடையும் தீவிரப்படுத்தப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளுக்கு மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களும் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் குண்டு வீச்சு தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தினம் தினம் மக்கள் இறந்துகொண்டும் இருக்கின்றனர்.

தமிழீழப் பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளும் குண்டுவீச்சில் தகர்க்கப்பட்டுள்ளன.

குண்டு வீச்சினால் காயம் அடையும் மக்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு வாகனம் பயன்படுத்துவதற்கு எரிபொருள் கிடையாது.

வைத்தியசாலைகளிலும் மருந்து வகைகள் போதாத நிலை. குழந்தை களுக்கு பாலுணவு கூட தடைசெய்யப்பட்டுள்ளது. இப்படியாக எம்மக்கள்மீது மிகப்பெரிய அளவில் இராணுவ அழுத்தத்தை பிரயோகித்துக்கொண்டு மறுபுறம் சமாதானத்திற்கு அழைப்பு.

மக்கள்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் இரண்டு நோக்கங்களைக் கொண்டது.

1. மக்களை மிகவும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கி விரக்தி நிலைக்குத் தள்ளி, போராட்டத்திற்கு எதிராக மக்களை திருப்புவது. இது 'கெரில்லா எதிர்ப்பு யுத்த முறை'யில் கடைப்பிடிக்கப்படும் ஒரு பாணி.

2. நேரடியான இராணுவ நடவடிக்கையை போராளிகள் மீது பிரயோகிக்கும் அதேவேளை, மக்கள் மூலமாகவும் அழுத்தத்தை கொடுத்து போராளிகளை பணியவைப்பது.

இக்கட்டத்தில் மாகாணசபை போன்ற அரைகுறை தீர்வுகளை காட்டி அத்தீர்வுகளை போராளிகள் ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகின்றனர். இப்படியான வழிமுறைகள் காலங்காலமாக அடக்குமுறையாளர்களால் கடைப்பிடிக்கப்பட்டுத்தான் வருகிறது.

ஆனாலும் விடுதலைக்காக போராடும் மக்களும் போராளிகளும் இத்தகைய அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்காது வெற்றியீட்டிக்கொண்டுதான் இருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்